IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.SC.No. 39/2024 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 1, PW 2 |
| Name | ஜெய மேரி. |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21st day of May 2025.

21.05.2025.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

சத்தியமாக சொல்கிறேன்.

முதல் விசாரணை:–

நான் தற்சமயம் ரோஸ்மவுண்டில் குடியிருந்தும், தனியார் உணவு விடுதியில் பராமரிப்பாளராக வேலை செய்து வருகிறேன். பட் பயரில் என் கணவர் என் அம்மா வீட்டில் வசித்து வருகிறார். என் வீட்டிற்கு அவ்வப்போது வந்து செல்வார். எனக்கு 2 குழந்தைகள், 1 மகன், 1 மகள்

ஆவார். இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுமி என்னுடைய மூத்த மகள் ஆவார். எனது மகள் கூடலூரில் உள்ள பாத்திமா கார்மண்டில் படித்து வந்தார். பின்னர், உதகை பெத்லேயகம் பள்ளியில் சேர்ந்தும், பள்ளிக்கு செல்ல பிடிக்காமல் வீட்டில் இருந்து வந்தார். எனது தங்கை பெயர் ஜீலியட் மேரி அவர் மார்கெட் அருகில் உள்ள ரேஷன் கடையில் வேலை செய்து வருகிறார். என் தங்கையை பார்த்து வருவதற்காக அவர் பணி புரியும் ரேஷன் கடைக்கு சென்று வருவார். ஒரு நாள் வீட்டில் இருந்து சென்ற என் மகள் மாலை நேரம் ஆகியும் வீடு திரும்பாததால் தேடி பார்த்தோம் கிடைக்கவில்லை. என் தங்கை வீடு இருக்கும் எள்கில்லில் தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை. பின்னர், மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். புகாரினை என் தங்கை எழுதினார், நான் கையொப்பம் செய்தேன். அந்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியும். அந்த புகார் (அதசாஆ 2 ) ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர். பின்னர், மறுநாள் மாலை எனது மகள் வேறொரு நபரின் அலைபேசியில் இருந்து எனக்கு போன் செய்தார். நான் அவரை ஹில் பேங்க் சென்று அழைத்து வந்தேன். பின்னர், அவரை விசாரித்த போது எனது தங்கை பணி செய்யும் ரேஷன் கடைக்கு அருகில் இருக்கும் கடையில் பணி செய்யும் நாகராஜ் என்பவருடன் சென்றிருந்ததாகவும். அவர் கூடலூர் கூட்டி சென்றதாகவும், அவருடைய நண்பருடைய வீட்டில் கூடலூரில் தங்கியிருந்ததாகவும் சொன்னார். எனது மகள் எதிரியுடன் தங்கியிருந்த சமயத்தில் என்ன நடந்தது என்று அவள் என்னிடம் தெரிவிக்கவில்லை. பின்னர், மருத்துவமனை சென்று எனது மகளினை மருத்துவ பரிசோதனை செய்த பிறகு எதிரி என் மகளுடன் தவறாக நடந்து கொண்ட சங்கதி எனக்கு தெரிய வந்தது. போலிஸ் விசாரணையில் நடந்தவற்றை தெரிவித்தேன்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:—

எந்த தேதியில் எனது மகள் வீட்டைவிட்டு வெளியேறினார் என்ற விவரம் கேட்டால் தேதி ஞாபகம் இல்லை. புகாரினை என் தங்கை தான் எழுதினார் என்கின்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எனது மகள் வேறொருவரின் கை பேசியில் இருந்து அழைத்து பேசிய விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லிஉ ள்ளேனா என்◌ாறல் சொல்லி உள்ளேன். எதிரி என் மகளை கூடலூரில் உள்ள எங்கு அழைத்து சென்றார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி போலிஸ் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை:—**

இல்லை.

Sd/- Jeya Mari/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. M.Senthilkumar/
Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.